மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 683 குறித்து ஒரு விளக்கத்தினை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்தத் திரையரங்க கடனுதவி பற்றி எழுப்பப்பட்ட துணை வினாவிலே எத்தனை பேர்கள் கடன்களை அடைத்திருக்கிறார்கள் என்று கேட்டார்கள். 81 பேர்களுக்கு கடன் வழங்கியதில் 28 பேர்கள் முழுவதையும் கட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒழுங்குப் பிரச்சினை.

உறுப்பினர்களுக்கான சில சலுகைகளை அறிவிக்கும்போது அமைச்சர் குறிப்பிட்ட சில வார்த்தைகள் குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, நான் ஒரு சந்தேகத்தை தெரிந்து கொள்வதற்கு உங்கள் மூலமாக இந்த அவையிலே சொல்கிறேன். நேற்றையதினம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு சில சலுகைகளை அளித்து பதில் அளிக்கிறபோது பேருந்திலே பயணம் செய்யக்கூடியவர்கள் தங்களுடைய மனைவியை அழைத்து செல்லலாம். அதிலே தவறு நடந்துவிடக் கூடாது என்பதற்காக ஒன்றை சொன்னார்கள். அதற்கு அடுத்து சொல்கிற போது மனைவியை அழைத்துச் செல்லாத நேரத்தில் வேறு ஒருவரை அழைத்துச் செல்லலாம், ஆனால் கூடுமானவரையில் அவர்கள் ஆண்களாகவே இருக்கவேண்டும் என்று சிரித்துக் கொண்டே சொன்னார்கள். பத்திரிகையிலே செய்தி வருகிறபோது அதுவேறு விதமாக உறுப்பினர்களை தவறாக, கேவலமாக சொல்கிறதைப் போல தொனிக்கிறது. இருக்கிற உறுப்பினர்கள் தவறு செய்யக் கூடியவர்கள் என்ற அர்த்தம் தெரிகிறது. ஆகவே அதை மாற்றியமைத்து சட்டப்பேரவை உறுப்பினர்கள் செல்கிறபோது அவர்களுடைய மனைவியை அழைத்துச்செல்லாதபோது தாய், தங்கையை அழைத்து செல்வார்கள். அப்படி எல்லோரும் செல்வதற்கு வசதியாக குறிப்பிலே இருக்கிற அப்படிப்பட்ட வாசகத்தை நீக்கிவிட்டு வேறு வாசகத்தை அமைக்க நீங்கள் ஒரு அறிவிப்பு செய்யலாமா என்பதை கேட்டுக் கொள்கிறேன்.

1982 மார்ச் 30]

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைகளிலே எல்லாம் வந்திருக்கிறது. இனிமேல், இந்தக் குறிப்பை மாற்றி, நான் மட்டும்தான் படிக்க வேண்டும். (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் ஒரு வேடிக்கை குறிப்பாகத்தான் சொன்னேனே தவிர, எந்தத் தனிப்பட்ட உறுப்பினரையும் குறை சொல்ல வேண்டுமென்றோ அல்லது குற்றம் சாட்ட வேண்டுமென்றோ அல்ல. அப்படிப்பட்ட எண்ணம் எக்காரணம் கொண்டும் வெளியிலே இருப்பவர்களுக்கு வரக் கூடாது என்ற நோக்கத்திலே சொன்னேனே தவிர யாரையும் குறிப்பிட்டுச் சொன்னேன் என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். அது வேடிக்கையாகச் சொல்லப்பட்ட ஒன்றுதான்.

(3) தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நடந்த நிகழச்சிகளின் ஒரு பகுதியைச் சொல்லாததற்கே வானொலி மீது உரிமைப் பிரச்னை அனுமதிக்கப்பட்டு, அதற்கு வானொலி வருத்தம் தெரிவித்து இருக்கிறது. ஆனால்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமைப் பிரச்னை பற்றி அறையில் வந்து கேளுங்கள், நான் பதில் சொல்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே,

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சண்முகம் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் கூடுகின்ற இந்த நேரத்திலே தமிழகத்திலே மேலெழுந்த பல முக்கிய சம்பவங்கள் பற்றி நாங்கள் பல ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால், வழக்கமாகவே பெரும்பாலும் அவைகள் எல்லாம் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்று வருகின்றன. இன்றைக்கு நீங்கள் சொன்னதிலிருந்து நான் புரிந்துகொள்வது, இன்றைக்குப் பதட்ட நிலையே இல்லை..........

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.